றும் அறிமுகப்படுத்தியுள்ளார்கள். 1995ம் வருடத்தில் பிலிப்பைன்ஸ் நாட்டில் 'ரேபிட் டிப்ளாயிமென்ட் ஃபோர்ஸ்' என்ற ஓர் அமைப்பை ஜிகாதி எண்ணம் கொண்டவர்கள் எல்லாம் சேர்ந்து உருவாக்கியிருக்கிறார்கள். அதிலும் இந்த அஷீஸ் முக்கியப் பங்காற்றியுள்ளான். அதன் பிறகு 1997 வரை லஷ்கர்-ஈ-தொய்பாவின் கூட்டங்களில் கலந்து கொள்வதை அஷீஸ் பழக்கமாக வைத்திருந்துள்ளான். அப்படி வர முடியாத பட்சத்தில் அந்த வருடாந்திரக் கூட்டங்களில் அஷீஸ் பேசிய பேச்சுகள் ஒலிபரப்பப்படும். அப்படியும் இல்லையென்றால் ஃபோனிலாவது பேசி, அது அப்படியே அந்தக் கூட்டத்தில் ஒலிபரப்பப்படுமாம். 'சௌதி மன்னர்களுக்கு எதிராக இருக்கும் ஒஸாமா பின் லேடனுக்கு உதவியதாக இந்த அஷீஸை ஒரு முறை சௌதி அரசாங்கம் கைது செய்தது' என்று பாகிஸ்தானில் உள்ள இஸ்லாமிய வட்டாரத்தில் வதந்தி உண்டு.



ஆனால் இதுவரையில் 'அபு அப்தல் அஷீஸ் எப்படியிருப்பான்? அவன் அங்க அடையாளங்கள் என்ன?' என்பது மர்மமாகவே இருக்கிறது. லஷ்கர்-ஈ-தொய்பா கூறியது போல் அஷீஸ் 'இந்தியன் முஸ்லிம்' என்றால், அவனின் உண்மையான பெயர் என்ன? இந்தியாவின் எந்த பகுதியைச் சேர்ந்தவன் அவன்? அவனுக்கு உள்ள அரசியல் தொடர்பு என்ன? சிமி இயக்கத்துடன் தொடர்பு இருக்கிறதா? - இவை எதுவுமே இதுவரை தெரியவில்லை. எது எப்படியோ, அவ்வப்போது கிடைக்கும் தகவல் அடிப்படையில் சில விஷயங்கள் புலனாகின்றன.

▲ *ஜிகாதி தீவிரவாதத்துடன் தொடர்புள்ள இரு இந்தியன் முஸ்லிம்கள், சௌதி அரேபியாவில் இருந்து செயல்படுகிறார்கள் என்று தெரிகிறது.*

▲ *அதில் பாகிஸ்தானி தீவிரவாதிகளால் அபு அப்தல் அஷீஸ் என்று கூறப்படுபவனுக்கு லஷ்கர்-ஈ-தொய்பா உறவு இருக்கிறது. போஸ்னியாவிலும், காஷ்மீரிலும் ஜிகாதி போராட்டத்திற்கு இவன் உதவுபவனாக இருக்கிறான்.*

▲ *இந்தியாவிலும், அரபு நாடுகளிலும் 'சிமி'யின் நடவடிக்கைகளையும் சௌதி அரேபியாவில் இருந்து பஷீர் கவனித்து வருகிறான்.*

2002ல் குஜராத் கலவரத்திற்குப் பிறகு அங்கு முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் அடங்கிய வீடியோ கேஸட்டுகளை விநியோகித்து அரபு நாடுகளில் உள்ள இந்திய மற்றும் பாகிஸ்தான் முஸ்லிம்கள் நிதி வசூலில் இறங்கினார்கள் என்று செய்தி வந்தது. அந்த நிதி 'பாதிக்கப்பட்ட முஸ்லிம்களுக்கும், அதே போல் முஸ்லிம்களை தாக்கியவர்களுக்கு குஜராத்தில் பதிலடி கொடுக்கவும் செலவிடப்படும்' என்ற நோக்கத்தில் அந்த நிதி வசூல் நடந்ததாக அப்போது செய்தி வெளியானது. இதே மாதிரி டிசம்பர் 2002 வாக்கில் சௌதி அரேபியாவில் உள்ள ஜிகாதி தீவிரவாதிகளின் உந்துதலில் தமிழகத்தில் உருவான 'முஸ்லிம் டிஃபென்ஸ் ஃபோர்ஸ்' என்ற புதிய அமைப்பை தமிழ்நாடு போலீஸ் கண்டு பிடித்தது.

கடந்த சில வருடங்களாக மும்பை, தென் இந்தியா, இலங்கையின் கிழக்கு மாகாணம் போன்ற இடங்களில் 'ஜிகாதி வலை' ஒன்று உருவாகி வருகிறது என்றும், அதில் சிமியும், லஷ்கர்-ஈ-தொய்பாவும் தனியாகவோ, இணைந்தோ செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்றும் தகவல். இதற்கான நிதி ஆதாரங்கள் பெரும்பாலும் சௌதி அரேபியா மற்றும் அரபு நாடுகளில் இயங்கும் 'இந்தியன் மற்றும் பாகிஸ்தான் ஜிகாதி போராளிகள்' மூலம் நடக்கிறது என்கிறார்கள். லஷ்கர்-ஈ-தொய்பா 'தர்ம காரியங்கள் செய்யும் நிறுவனங்கள்' என்று சொல்லும் சௌதி அரேபியா நிறுவனங்களில் இருந்து நிதி பெறுகிறது. சௌதி அரேபியாவில் வாழும் இந்தியன் முஸ்லிம்களில் இருந்து ஜிகாதிகளைத் தேர்வு செய்ய ஒரு அலுவலகத்தையே எல்.ஈ.டி. சௌதி அரேபியாவில் வைத்துள்ளது. புனிதப் பயணமாக சௌதி அரேபியாவிற்கு மற்ற நாடுகளில் இருந்து வரும் முஸ்லிம்களில் இருந்தும் இந்த எல்.ஈ.டி. இது போன்ற 'ஜிகாதி போராளிகளை' தேர்வு செய்கிறது.

ஆகவே எல்.ஈ.டி. சௌதி அரேபியாவில் இருந்து செயல்படுவதையும், அந்நாட்டு நிறுவனங்கள் மூலம் இந்தப் பயங்கரவாத இயக்கத்திற்கு வரும் நிதி ஆதாரத்தையும் தடுக்க வேண்டும் என்று பிரதமர் மன்மோகன்சிங் கேட்டிருந்தால் அது பயனுள்ளதாக இருக்கும். அதே போல் சௌதி அரேபியாவில் இருந்து தலைமறைவாகியுள்ள 'சிமி' தொடர்பாளர்கள் பற்றியும் கேள்வி எழுப்பியிருக்க வேண்டும்.

▲

# சௌதியில் பிரதமர் பேசியது என்ன?